

காஞ்சி வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2004 மார்கழி 22 (6-1-74) | இதழ்: 26

★

உள்ளே......

ஓட்டாண்டியாக்கிவிட்டு
(தம்பிக்கு அண்ணாவின் மடல்)

★

குடும்பப் பாதுகாப்புத் திட்டம்
(தலையங்கம்)

★

மான் வாழ மயில் பறந்தது!
(சிறுகதை)

★

மெல்லிய காதல்
(தொடரோவியம்)

★

எங்கள் மனம்

(சோலை. இளம்பரிதி)

★

புன்னகைத்த பூக்காடே; பொங்கிவந்த பொன்னூறே!
தென்பொதிகைப் பூங்காற்றே தேய்த்தெடுத்தச்
சந்தனமே!

வைரமணி இட்டிழைத்த வானத்துப் பந்தலிலே
கைகொட்டிப் புன்னகைத்த கன்னித் தமிழ்நிலவே!
கோட்டுப்பூ கண்மலர கூவும் இளங்குயில்போல்
பாட்டுப்பூத் தேரேறி பாடிவந்த பைந்தமிழே!
சங்கத் தமிழான சண்பகப் பூங்காவே
எங்கள் இதயத்தின் இன்பத் தமிழ்ப் பாவே!
மூட இருள்ஓட்ட முனிந்தெழுந்த செங்கதிரே!
வாடிக் கிடந்தோரை வாழ்வித்த வான்மழையே!
சாகாத காவியத்தை இச்செகத்தில் நீபடைத்து
போகாத ஊருக்குப் போயோடி விட்டாயோ?
பூங்காற்று நீயின்றி பூமி கொதிக்கையிலே
ஏங்குதண்ணா எங்கள் மனம்!

விலை: 0-25 காசு

"காதலோ காதல்!"

ஓ! உலகினரே என்னை விட்டு விடுங்கள்; நான் சாகப் போகிறேன்!

வெந்தபுண்ணில் வேல் நுழைந்ததுபோல நொந்து கிடக்கும் என் உள்ளக் குமுறலை எவரிடமாவது சொல்லி அழப் போகிறேன்.

விந்தை உலகின் நிந்தையிலே சிந்தை மயங்கிக் கிடந்த என் சொந்தமில்லா நாட்களை எண்ணிப் பார்க்கிறேன்; வேதனை ஊற்றெடுக்கிறது.

அன்றைய காதல், இன்றைய என் சாதலுக்குப் படியமைத்து விட்டதே!

ஓ! என்னை விட்டு விடுங்கள்; நான் சாகப் போகிறேன்!

காதல் எனும் பொழுதே கன்னியர் உள்ளமெல்லாம் களிநடமிடுகிறது; காளையரின் உயிரணுக்கள் ஒளிபெற்றெழுகின்றன.

காதல் எனும் பொழுதே தொண்டுக் கிழங்களும், தாம் கண்டு உண்ட பிண்டங்களின் பசுமை நினைவலைகளை எழுப்புகின்றனர்.

பாடி ஆடும் குழந்தை முதல், நாடி தளர்ந்து வாடி ஒடுங்கும் முதியோர் வரை காதல் எனும் பொழுதே நெஞ்சுக்குள்ளே ஓடி இதயவீணையை மீட்ட ஆரம்பித்து விடுகின்றனர்.

ஆனால்,

காதல் எனும் பொழுதே எனக்கு 'ஓ'வென்று கதறி அழ வேண்டும் போல் தோன்றுகிறது.

'ஓ' என்னை விட்டுவிடுங்கள்; நான் சாகப் போகிறேன்.

மழைக் காலத்துத் தோன்றும் மஞ்சள் வெயிலைப் போல; வசந்தத்தில் தோன்றும் தளிர் இலையைப் போல என் இதயத்தில் காதல் தேன் சொட்டுகிறது.

கோடையில் பெய்த மழையைப் போல், குளிர் நிலவில் கொட்டிய வெம்மையைப் போல் என் எண்ணத்தில் காதல் கிற்றுக்கள் சலசலக்கின்றன.

அப்படியிருந்தும், ஏனோ காதல் என்றதும் என் இதயத்தில் கனல் கொட்டியதுபோல் இருக்கின்றது.

எவரும் இல்லாத நேரத்தில் அழுகிறேன்; எவரையாவது கண்டு விட்டால் சிரிக்கிறேன். காரணம் இல்லாமல் என் உள்ளத்து உணர்ச்சிகளை மாற்றிக் கொள்கிறேன்.

எவரிடமாவது என் உள்ள குமுறலைச் சொல்லி அழநினைக்கிறேன்; முடியவில்லை.

ஓ! என்னை விட்டுவிடுங்கள்; நான் சாகப்போகிறேன்!

காதலென்னும் திரை என்னைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டிருக்கிறது; வெளியே இருப்பவர்கள் என் கண்ணுக்குத் தெரிகின்றார்கள்; நான் அவர்கள் கண்ணுக்குத் தெரியவில்லையே! வெளியே, இருப்பவர்கள் கூறுவது தெளிவாக என் காதுக்குக் கேட்கிறது; நான் கூறுவது அவர்கள் காதுக்குக் கேட்கவில்லையே!

என்னைக் கண்டு கொள்பவர் யார்? என் குரலைக் கேட்க வல்லார் யார்?

என் வலிமையையும், எளிமையையும் ஏதோ ஒரு சக்தி கடித்துக் குதறுகிறதே! அது எது?

எனக்குள்ளே இருந்துகொண்டு பேரிரைச்சல் போடுகின்றதே ஒரு பேய்வண்டு! அது எது?

என் அறிவையும், செறிவையும், ஆற்றலையும், புலமையையும், அன்பையும், பண்பையும், அடக்கத்தையும், ஒழுக்கத்தையும் கொஞ்ச கொஞ்சமாக அரித்துக் கொண்டிருக்கிறதே! அது எது?

இனிய நினைவுகளையும், கசப்பான உறவுகளையும் தினமும் என் கனவில் படையலாக்குகிறதே! அது எது?

இன்பத்தையும் துன்பத்தையும் ஒரே நேரத்தில் ஊட்டி என்னைத் திக்குமுக்காட வைப்பது எது?

உலகுறங்கும் இரவெல்லாம் நான் ஏன் பேய் போல விழித்துக் கொண்டிருக்கிறேன்?

ஆயிரம் அமாவாசை ஒன்றாய்ச் சேர்ந்தார் போலல்லவா என் உள்ளம் இருண்டு விட்டது; அதற்குக் காரணம் என்ன?

உருவமில்லா இருட்டையும், ஊர்நீரில்லா பாழடைந்த கிணற்றையும் என் உள்ளம் தொடர்ந்து கொண்டிருக்கிறதே! ஏன்?

ஓசையில்லாத் தனிமையையும், உவகையில்லாப் பொட்டல் காட்டையும் என் மனது ஏன் நாடுகிறது?

அதுதான் காதலா!

ஓ! என்னை விட்டுவிடுங்கள்; நான் சாகப் போகிறேன்!

அந்தி வானத்து எழிலையும்; அசைந்தாடும் கோலத்தேர் பொழிலையும் கண்டு கூத்தாடிய என் உள்ளம் இப்பொழுது ஏன் சலனமற்று இருக்கிறது?

இளங்காலைப் பொழுதின் கதிரிலே இன்னிசை பாடிக் களித்த என் உள்ளம் இப்பொழுது ஏன் இருட்டறையில் முடங்கிக் கிடக்க ஆவல் கொள்கிறது?

நான் விடுகின்ற ஒவ்வொரு பெருமூச்சும் என்னை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கும் பயங்கர உணர்வின் எதிரொலியா?

ஒவ்வொரு நொடியும் என்னை அடிமைத்தளைக்கு ஆட்படுத்திக் கொண்டிருக்கும் அந்த அபூர்வ சக்திதான் எது?

அதுதான் காதலா!

ஓ! என்னை விட்டுவிடுங்கள்; நான் சாகப்போகிறேன்!

பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் இடப்பட்ட பாலம் தான் எது? ஒரே நேரத்தில் கனவாகவும், உணர்வாகவும்; குளிராகவும் வெம்மையாகவும்; பசியாகவும் உணவாகவும் விளங்குவது எது? வியப்பின் கொடுமுடியைத் தொட்டுக் காண்பிப்பது எது?

சோர்வென்னும் பேருறக்கத்திலிருந்து மீட்டு மீண்டும் சோர்வுக்குள்ளே ஆழ்த்துவது எது?

பெற்றோரையும் மற்றோரையும் மறந்து, கற்ற கல்வியையும் துறந்து, கன்னியொருத்தியின் பின்னே பிண்ணி ஓடச் செய்வது எது?

கடும்புயல் காற்றையும், சுடு நெருப்பாற்றையும்; திடமன வலிமையோடு கடக்க ஆற்றல் அளிப்பது எது? கன்னியின் கனி இதழுக்காகக் கற்பூர தீபத்தைப்

[4-ஆம் பக்கம் பார்க்க.]

வலசை து. செயராமன்

காஞ்சி வார இதழ்
நிறுவனர்: அறிஞர் அண்ணா

ஆண்டுச் சந்தா ரூ. 16 (மலர் உட்பட) ஆறுமாதச் சந்தா ரூ. 8

மலர் 10 | 6—1—74 | இதழ் 26

குடும்பப் பாதுகாப்புத் திட்டம்

பல்வேறு வகைகளில் இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டும் வகையில் பீடுநடை போடும் பெருமைக்குரிய மாநிலம், தமிழ்நாடு ஆகும்.

ஏனைய மாநிலங்களெல்லாம் பின்பற்றும் வகையில் **'குடிசை மாற்று வாரியம்'** அமைத்த பெருமை தமிழகத்திற்கே உரிய தனிப் பெருமையன்றோ? இன்று, எத்தனை மாநிலங்கள் இதன் நகல் திட்டத்தைக் காணத் துடித்துக் கொண்டிருக்கின்றன.

தமிழகத்தின் **'பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம், இலவசக் கண் சிகிச்சைத் திட்டம்'** போன்றவை, பிற மாநிலங்களும் வியந்து போற்றும் வண்ணம் செயல்பட்டு வருகின்றனவன்றோ?

இன்று, இந்தியத் துணைக்கண்டத்தில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றுத் திகழும் தன்னிகரற்ற மாநிலம் தமிழகம் எனில் முற்றிலும் உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!

அதன் புகழ்ப் பதக்கத்தில் மேலும் ஓர் ஒளிமுத்தினைப் பதித்ததுபோல, தமிழக அரசு ஒரு புதிய திட்டத்தை அறிவித்துள்ளது.

ஆசிரியர் உட்பட அரசு ஊழியர்கள் அனைவரும் பயன்பெறத்தக்க வகையில் வகுக்கப்பட்டுள்ள **'குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டமே'** அதுவாகும்.

அரசு ஊழியர் குடும்பங்களின் எதிர்கால நல்வாழ்விற்கு உறுதி செய்யும் இத்திட்டத்தைப் பல்வேறு அரசு ஊழியர் சங்கங்களும், ஆசிரியர் மன்றங்களும் உளமார வரவேற்றுப் போற்றுகின்றன;

இத்திட்டத்தைக் கொணர்ந்த மாண்புமிகு **முதல்வர் கலைஞர்** அவர்களை மனமாரப் பாராட்டி மகிழ்கின்றன.

மாதந்தோறும் பத்து ரூபாய் கட்டி வந்தால், பணிக்கால இறுதியில் வட்டியுடன், கணிசமான தொகையினை ஊழியர் பெறும் வகையிலும், இடையில் இறக்க நேர்ந்தால் அவர்தம் குடும்பத்திற்கு ரூபாய் பத்தாயிரம் மொத்தமாக வழங்கப்படும் தன்மையிலும் அமைந்துள்ள இக் 'குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்' ஏனைய மாநிலங்களுக்கு முன்னோடியாக வகுக்கப்பட்டுள்ள புரட்சிகரமான திட்டமாகும்.

"சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த திட்டம்"

"பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய புதுமைத் திட்டம்"

"ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் வாழ்வு இருளை நீக்கிப் புத்தொளி நல்கும் புரட்சித் திட்டம்"

—என்றெல்லாம் பல்வேறு அமைப்புக்களின் ஒருமித்த பாராட்டுதலைப் பெற்றுள்ள ஒப்பற்ற திட்டமாக, இக்குடும்ப நல நிதித் திட்டம் அமைந்துள்ளது.

முன்னேற்றக் கழக அரசின், முதல்வர் கலைஞரின் செயல் திறனுக்கோர் சிறந்த எடுத்துக்காட்டே, இச்சீரிய திட்டம் என்பதனை அறிகின்றோம்; அகம் மகிழ்கின்றோம்.

'குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்' கொணர்ந்த கழக அரசை உளமார வாழ்த்துவோம்; போற்றுவோம்.

—மணிவேந்தன்

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

போன்று தன்னையே கரைத்துக் குறைத்துக் கொள்ளத் தூண்டுவது எது?

அதுதான் காதலா!

ஓ! என்னை விட்டுவிடுங்கள்; நான் சாகப்போகிறேன்!

நான் ஒரு காளை வளர்த்தேன்; அது என்னையேக் குத்திக் கொன்றுவிட்டது. இருட்டைப் போக்க நான் விளக்கேற்றினேன். ஆனால், விளக்கின் சுடர் அதிகமாகி அது என் வீட்டையே அழித்துவிட்டது.

சிந்தித்துப் பார்க்கிறேன்; என் செயலுக்கு நானே காரணமாக இருக்கிறேன். என் முட்டாள் தனத்தை நினைத்து அழுவதா! சிரிப்பதா! என்று விழிக்கிறேன். என்மேல் எனக்கே கசப்பு ஏற்படுகிறது.

காணும் அழகையெல்லாம் ரசிக்க உரிமையுண்டு. ஆனால், சொந்தமாக்கிக் கொள்ள உரிமையுண்டா?

நான் சொந்தமாக்கிக் கொள்ளத் துடித்தேன்; சொந்தமாக்கிக் கொண்டேன்.

வண்ண ஓவியத்தைக் கண்டேன்; வாங்கிவிட முனைந்தேன்; வாங்கிவிட்டேன்.

அது என் குற்றமா? நான் ஒரு கலைஞனல்லவா!

என்னை இப்படியெல்லாம் ஆட்டிவைப்பது எது?

அதுதான் காதலா!

ஓ! என்னை விட்டுவிடுங்கள்; நான் சாகப்போகிறேன்!

மேக ஓடங்கள் விரைவாகக் கரைந்து மழையாகப் பெய்துவிடுகிறது.

நான் மேகமாகப் பிறந்திருக்கக் கூடாதா? மழையாகப் பெய்து பயிர்களுக்கு உயிரூட்டி இருப்பேனே!

நான் செய்வது எல்லாம் சரியாகவும், முறையாகவும் எனக்குத் தோன்றுகிறது; ஏனோ மற்றவர்களுக்கது தவறாகப் படுகிறதே!

என் சிந்தனை மலர்களை நான் மணமுள்ளதாகத்தான் தோற்றுவிக்கிறேன்; ஏனோ மற்றவர்களுக்கது மணமின்றி காணுகிறதே!

என் கையே என்னை அடிக்கிறது; என் உள்ளமே என்னைக் கொல்லுகிறது.

என் குமுறலை எவரிடமாவது சொல்லி அழத்தான் நினைக்கிறேன். ஆனால், தன் அழுகைக்குப் பின்தான் என் அழுகை என்று முறை வைத்து விடுகின்றனரே!

நான் மிதிவண்டியை மிதிக்கிறேன்; இரண்டு காலையும் ஒரே நேரத்தில் மேலிருந்தோ அல்லது கீழிருந்தோ வைத்து மிதிக்க முயலுகிறேன். ஆனால், தோல்வி கண்டு துவலுகிறேன். ஒருகால் மேலும், மறுகால் கீழுமிருந்து தான் மிதிக்க வேண்டி இருக்கின்றதே!

நான் காதலையும், வாழ்வையும் ஒரே மட்டத்தில் இணைத்து ஓட்டலாம் என்று நினைக்கிறேன். அவைகளோ எதிரும் புதிருமாகவே ஓடுகின்றன!

அப்படி என்னை இயக்கிக் கொண்டிருப்பதுதான் எது?

அதுதான் காதலா!

ஓ! என்னை விட்டுவிடுங்கள்; நான் சாகப்போகிறேன்!

முன்பெல்லாம் நான் சுதந்திரப் பறவையாகச் சுற்றித்திரிந்தேன்; ஆனால் அந்தச் சக்திக்குள் ஈர்க்கப்பட்ட பிறகு ஓர் அடிமையாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

காதலின் நுழைவாயிலுக்குள் நுழைவதற்குமுன் அனைத்து நங்கையரின் அழகையெல்லாம் தரம் பிரித்துச் சுந்தரப் பாவிசைத்துக் கொண்டிருந்தேன். அந்தக் கோயிலுக்குள் நுழைந்தபிறகோ ஒருத்தியைத் தவிர மற்றெல்லா நங்கையரும் அழகில் குறைந்தவர்களாகவே காணுகின்றனர்.

காதலென்னும் நோயை நான் தழுவுவதற்குமுன்பு என்சொல்லை அனைவரும் வேதமாகவும், இல்வாழ்வின் நாதமாகவும் போற்றினர்; இப்பொழுது நான், அந்நோயால் அலங்கோலமாக்கப்பட்டேன். என் சொல்லை வேதமாக நினைத்தவர்களே இப்பொழுது என் சொல்லை வறட்டு வம்பளப்பாகக் கேவலப் படுத்துகின்றனர்.

எனக்குத் தெரிந்தவர்களும், என்னைத் தெரிந்தவர்களும் ஏனோ என் அருகிலும் வராமல், என்னை அனாதையாக்கி ஓடுகின்றனர்.

என் வேதனை ஓலத்தை எங்காவது தனிமையில் சென்று கொட்டித் தீர்க்க வேண்டும்போல் தோன்றுகிறது.

என்னை இந்நிலைக்கு உருகுலைத்த சக்திதான் எது?

அதுதான் காதலா!

ஓ! என்னை விட்டுவிடுங்கள்; நான் சாகப்போகிறேன்!

நாகரிக உடையணிந்த நங்கையொருத்தி வருகின்றாள்; அவளுக்காகக் காத்திருந்த ஆடவனிடம் நளினமாகப் பேசுகின்றாள். அடிக்கடிச் சந்திக்கின்றாள். பிணக்கு இணக்கமாகிறது; கன்னியவளை இழுத்தணைக்கிறான்; இதழோடு இதழைச் சேர்க்கிறான்; முத்தமிடுகிறான்; கொத்திவிடுகிறான் கற்பை. மங்கையவளும் முழு நிலவைப் போல களங்கம் பெறுகின்றாள்.

களங்கம் பெற்ற அபலை காதலனைத் தேடும் நிலைக்கு வந்துவிடுகின்றாள்: விட்டு ஓடியவன் எங்கே தொட்டணைக்க வரப்போகிறான். காதலால் காமத்தைப் பெற்ற மங்கை, இறுதியில் களங்கத்தால் சாதலை அணைத்துத் தூங்கி விடுகிறாள்.

இளைய உள்ளங்களைக் கெடுத்து, இனிய உறவுகளைப் படைத்து; மோகத்தின் வேகத்தை ஏற்றி, காமத்தால் கருத்தழியச் செய்து, கற்பைத் துறந்து, உடலை இறப்புக்கு விற்பனைப் பொருளாக்கும் சத்திதான் எது?

உலகத்தின் இலக்கியங்களை எல்லாம் ஒருநொடியில் அறிய செய்யும் சக்திதான் எது?

வாழ்க்கைக்கு இறுதிப் பயக்கக் கூடியது எது? இறுதியானது எது? செலவாகிக் கொண்டே செலவில்லாமல் இருக்கும் வாழ்வின் செல்வம்தான் எது?

உயிர்கள் ஒவ்வொன்றினுள்ளும் கலந்து இணையில்லா இசையெழுப்பிக் கொண்டிருப்பது எது?

உயர்ந்தவரைத் தாழ்ந்தவராகவும், தாழ்ந்வரை உயர்ந்தவராகவும் காட்டுவது எது?

அழகில்லாததை அழகாகவும், அழகுள்ளதை அழகற்றதாகவும் காட்டுவது எது?

சமுதாயத்தால் தள்ளப்பட்டு நம்மைச் சாக்கடையின் ஓரத்திற்குக் கொண்டு செல்வது எது?

கற்பையும், கற்பற்றதாகவும்; கற்பற்றதை கற்பாகவும் காணச் செய்வது எது?

உலகப்பெரும் காவியங்களையெல்லாம் ஒருநொடிக்குள் படைத்துக் காட்டுவது எது?

சரித்திரத்தைப் படைப்பது

[13-ஆம் பக்கம் பார்க்க.]

தம்பிக்கு ... மடல்

பார்த்துக் கொண்டிருக்கும்போதே நாட்கள் உருண்டோடிக் கொண்டிருக்கின்றன; தேர்தல் வேக வேகமாக நெருங்கி வந்துகொண்டிருக்கிறது.

நாலைந்து மாதங்களிலே பொதுத் தேர்தல் நடைபெற இருக்கிறது என்று நேற்றுதான் பேசிகொண்டிருந்ததுபோல இருக்கிறது, இப்போது பார்த்தாலோ ஐந்து அல்ல நாலும் அல்ல, மூன்று மாதங்களே இடையிலே உள்ளன என்று கூற வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டிருக்கக் காண்கின்றோம்.

நமக்கு மட்டுமா, காங்கிரசுக்கும் அதே நிலைமை தானே என்று கேட்பார்கள், ஆனால் தம்பி! இது ஏழைக் குடித்தனம், ஐந்தும் மூனும் அடுக்காக உள்ள இடம் அல்ல; எல்லாவற்றையும் நாமேதான் கவனித்துக் கொண்டாகவேண்டும். காங்கிரசுக்கு நிலை அப்படியா? ஏராளமான எடுபிடிகள்! பெட்டி வழிய வழியப் பணம்!! இதை முடித்து விட்டேன்—அதனை முடித்துத் தருகிறேன்—இது முடிந்துவிடும் என்று கூறிக் கட்டளையை எதிர்பார்த்துக் கிடக்கும் ஆள் அம்பு உள்ள கட்சி.

பதவியில் உள்ளவர்களிடம், அதிலும் தொடர்ந்து இருபது ஆண்டு அளவு பதவியில் உள்ளவர்களுக்கு. அதன் காரணமாகவே—ஒரு தனி செல்வாக்கு ஏற்பட்டு விடத்தானே செய்யும்.

பலன் பெற்றவர்கள், பலன்கிட்டும் என்று எதிர்பார்த்துக்கிடப்பவர்கள் அங்கு நிறையப் பேர் இருக்கத்தான் செய்வர்.

அதிலும் தகுதி திறமை ஆகியவைகளைக் காட்டிலும், பெரிய இடத்து சிபாரிசு, எந்த இடத்திற்கும் நுழைவுச் சீட்டாகப் பெரிதும் பயன்படும் நாட்டிலே, பதவியில் உள்ளவர்களைப் பலரும் மொய்த்துக் கொண்டிருப்பது எளிதாகப் புரியக்கூடியதுதானே. அதிலும், 'வரம்' கொடுப்பதிலே காங்கிரசார், வேறு எவரும் போட்டியிட முடியாத அளவு வல்லமை காட்டிப் பழக்கப்பட்டவர்கள்.

புதிய பாதைகள் போடுகிறார்கள்! பள்ளிக்கூடமா? புதிது புதிதாக!

மருந்தகம்! படிப்பகம்! மனமகிழ் மன்றம்! மாதர் சங்கம்! இவைகளுக்கான திறப்புவிழாக்கள், ஆண்டு விழாக்கள்! அமைச்சர்களின் பேருரைகள்! ஒவ்வோர் நாளும்!!

காளை வாங்க, கிணறு வெட்ட, உரம் வாங்க, வரப்பு அமைக்க கடன் கேட்டிருந்தவர்கள், கேட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது, இனி எங்கே கிடைக்கப் போகிறது என்று எண்ணி ஏக்கமடைந்து, சோர்ந்து கிடக்கிறார்களல்லவா, பலர்—அவர்களைத் தட்டி எழுப்புகிறார்கள் தர்பார் நடத்துபவர்கள், கடனா கேட்டிருந்தீர்கள்? அடுத்த வெள்ளிக்கிழமை கிடைக்கும் என்று வாக்களிக்கிறார்கள்.

உமது மகனா உத்தண்டன்? தெரியாமலே போய்விட்டதே! போன வருடமே இடம் வாங்கி இருக்கலாமே! இந்த வருடம் இடம், நிச்சயம்— என்று கூறுகிறார் மண்டலம்.

முகங்களிலே புதிய மலர்ச்சி! வார்த்தைகளிலே தனியானதோர் குளிர்ச்சி! நடவடிக்கைகளிலே ஒரு நட்புணர்ச்சி! எல்லாம் பளிச்சிடுகின்றன!

இவை 'போலி' என்பதனைக் காட்ட மட்டுமல்ல இவை குறித்து நான் கூறுவது. வாக்காளர்களை மயக்க, ஆட்சி நடாத்திடும் கட்சியினரால் முடிகின்ற அளவு, எதிர்க் கட்சிகளால் முடியாது. என்பதையும் உணர்த்துவதற்குத்தான்.

உடனடியாக உள்ளம் மகிழ்ந்திடும் செயலைச் செய்வதன் மூலமோ, இனிப்புப் பேச்சுப் பேசுவதன் மூலமோ, நீண்டகாலமாக நடத்திக் கொண்டுவந்த கொடுமைகளை மறைத்து விடலாம் என்று காங்கிரஸ் கட்சியினர் எண்ணுகின்றனர்.

ஆனால், உள்ளத்துக்கு மகிழ்ச்சி ஊட்டும் பொருள் தருவதன் மூலமாகவே, மக்களை மயக்கிவிட முடியும் என்ற நிலை இருக்குமானால், ஆளும் கட்சியான காங்கிரசு, சென்ற தேர்தலிலே 100-க்கு 42 என்ற அளவு ஓட்டுகள்தானா பெற்றிருக்கும்!

ஏழ்மை, அறியாமை, மனக் குழப்பம், மருட்சி என்பவைகளின் பிடியிலே சிக்கிக் கிடப்பினும், தமிழகத்துப் பொதுமக்கள்

ஓட்டாண்டியாக்கிவிட்டு!

ஜனநாயக உணர்வை, நீதி நியாயத்தில் கொண்டுள்ள பற்றினை விட்டுவிடவில்லை.

அந்த நம்பிக்கை எனக்கு நிரம்ப இருப்பதனால் மட்டுமே, எத்தனையோ இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலும், இந்த பொதுத் தேர்தலில் கழகம் ஈடுபட்டு வெற்றி வாகை சூடும் என்று அறிவித்திருக்கிறேன்.

கொடுமைகளுக்கு ஆளான மக்கள் மனம் குமுறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், மீண்டும் கொடுமையின் பிடியிலே சிக்கிவிடக்கூடாது என்பதிலே உறுதியாக உள்ளனர் என்பதையும், அதற்கான பணியாற்றுவதிலே ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதையும் ஒவ்வொரு கூட்டத்திலும் நான் காண்பது போலவே, பொதுமக்களிடம் தோழமைத் தொடர்பு கொண்டுள்ள கழகத் தோழர்கள் அனைவரும் காண்கின்றனர். அதனால்தான் அவர்களின் பேச்சிலே ஒரு தெம்பும், உறுதியும் காணப்படுகிறது.

தொகுதிகளின் நிலைமைகளை ஆராய்ந்து பார்த்ததில் தமக்கு ஏற்பட்ட கருத்து பற்றி நாவலர் என்னிடம் பேசிக் கொண்டிருந்தார்; அவரிடமேகூட, அந்தத் தெம்பு ததும்பிக் கொண்டிருக்கக் கண்டேன்.

சென்ற தேர்தலின்போது கழகத்திற்கு இருந்த செல்வாக்கு இம்முறை இன்னின்ன காரணங்களால் இந்த அளவு வளர்ந்திருக்கிறது என்பது குறித்து என்னிடம் எடுத்துக் கூறும்போதே கழகத் தோழரின் முகத்திலே ஒரு பொலிவு புதிதாகத் தவழ்ந்திடக் காண்கின்றேன்.

அவர் மாளிகை வாசி அல்ல!

அம்பாரம் அம்பாரமாக செந்நெல்லைக் குவித்து வைத்துள்ள பெரு நிலக்கிழார் அல்ல.

ஏழை அல்லது நடுதரக் குடும்பத்தினர். அவர்களிடம், தெளிவும் செயலார்வமும் இருந்திடக் காண்கின்றேன். செய்வதைத் திட்டமிட்டு, வகைப்படுத்தி, முறைப்படுத்திச் செய்திட வேண்டும் என்ற ஆர்வம் நல்ல அளவு இருந்திடக் காண்கின்றேன்.

கூட்டு முயற்சியிலே எத்தனை சாதிக்க முடியும் என்பதனை நாட்டுக்கு எடுத்துக் காட்டியதுடன், நாமே உணர்ந்து கொள்ளும்படிச் செய்திருப்பது நமது கழகம்.

ஆத்திரத்தினாலோ, அருவெறுப்பினாலோ, வெறும் பிரசாரம் என்ற போக்கினாலோ, நம்மைப்பற்றி, காங்கிரசிலுள்ளவர்கள் எவ்வளவு வேகமாக மேடைகளிலே பேசினாலும், இவனைப்பார்! அவனைப்பார்! என்று இழித்துரைத்தாலும், ஒரு நேரமாகிலும் அவர்கள் உண்மையை உணரும்போது

எப்படியோ இப்படி ஒரு வலிவினைத் திரட்டி விட்டார்களே!

என்று தம்மையும் அறியாமல், பேசாமலிருக்க முடியாது.

இதனாலா? அதனாலா? இப்படியா? அப்படியா?

என்றெல்லாம் ஆராய்ச்சி நடத்தி நடத்தி, தமது முறைகளைக்கூட அவர்கள் நம்முடைய முறைகளுக்கு ஏற்ப மாற்றிக் கொண்டும் பார்க்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு உண்மையைத்தான் அவர்கள் ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள்.

மக்களின் மனக்குமுறலின் வடிவமாக
மக்களின் பெருமுச்சின் வடிவமாக!

திராவிட முன்னேற்றக் கழகம் இருந்து வருகிறது என்ற உண்மையை.

மற்றொரு நம்பிக்கை ஆளவந்தார்களுக்கு இருக்கிறது; பணம் பத்தும் செய்யும் என்பதிலே உள்ள நம்பிக்கை.

ஆனால் பணத்திற்கு உள்ள மதிப்பே இன்று வேகமாகக் கெட்டுக்கொண்டு வருகிறது.

டில்லியில் மூண்டிடும் கலவரங்களைப் பற்றிய செய்தி கேட்டு, இந்தியாவுக்குக் கடன் தொகை எந்த அளவு கொடுக்கலாம் என்பதற்காகக் கலந்து பேசிய குழுவினர், இத்தனைக் குழப்பம் மூண்டு கிடக்கும் நாட்டுக்குப் பெரிய அளவு தொகை கடன் கொடுப்பது நல்லதுதானா? என்று யோசிக்கின்றனர்; கவலையைத் தெரிவித்துள்ளனர் என்பதும்,

வெளிநாடுகளிலே வாங்கியுள்ள கடனைத் திருப்பித் தருவதற்கான தவணையில் மாறுதல் தேவை; அதாவது பிறகு திருப்பித் தருகிறோம் என்று கூறித் தவணை வாங்கவேண்டும் என்ற யோசனை டில்லி வட்டாரத்தில் உலவுகிறது என்பதும்,

இந்தியாவிலே தொழில் நடத்த 'முதல்' போடுவதற்குப் பணத்திலே குறியாக உள்ள ஜப்பான் தயக்கம் காட்டுகிறது என்பதும்,

இன்றுள்ள பொருளாதார நெருக்கடியை எடுத்துக் காட்டுவதனை எத்தனை வேகமான காங்கிரஸ் பிரசாரகரும் மறுத்துவிடமாட்டார்.

நிலைமை, பல முனைகளில் நல்லபடியாக இல்லை.

சமூகத்தில், ஒழுங்கும் சாந்தியும் பெரிய அளவில் குலைக்கப்பட்டிருக்கிறது.

பசியும் பட்டினியும் கொட்டும் கொடுமை வளர்ந்தபடி இருக்கிறது.

இவைகளிலே ஒன்றைக் கூட சீர்படுத்த காங்கிரஸ் அரசினால் முடியவில்லை.

இருப்பினும் தேர்தலிலே நாங்கள் வெற்றி பெறுவோம் என்று அவர்கள் மார்தட்டுகிறார்கள் என்றால், எதை நம்பிக்கொண்டு அவ்விதம் பேசுகிறார்கள் என்று யோசிக்கவேண்டாமா?

படி அரிசி நாலு ரூபாயாம்! இந்த அக்ரமம் வேறு எங்காவது நடந்திடுமா? அனுமதிப்பார்களா? என்று பதறுகிற மக்களிடம் எப்படியும் நாங்கள் ஓட்டுகளைப் பறித்திடுவோம் என்று காங்கிரஸ் கட்சி கூறுகிறது என்றால், பணத்தால் எதையும் சாதித்துக் கொள்ளலாம் என்பது தவிர வேறு எதுவாக இருக்க முடியும்.

காலை மலர்ந்ததும், மக்கள் கண்களிலே படுவது, பட்டினிச் சாவு, கிளர்ச்சி, துப்பாக்கிச் சூடு, சிறை

வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட் ...	ரூ. 5	ரூ. 355
	ரூ. 10	ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு ...	ரூ. 5	ரூ. 337.50
	ரூ. 10	ரூ. 675.00

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

சிறு சேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

பிடித்தல், வெளி நடப்புகள், புகார்கள் உட்பூசல்கள் என்பன பற்றியே. ஒரு நாடு மிகச் சீர்கேடான நிலையிலே இழுத்துச் செல்லப்படுகிறது என்பதற்கு வேறென்ன சான்றுகள் வேண்டும்.

நம்ம சர்க்கார்
நல்லவர் சர்க்கார்

என்று சொந்தம் கொண்டாடுகிறார்கள்; இதற்கா எதிர்ப்புக் காட்டுவது என்று கேட்கிறார்கள்; மக்களோ

இருண்ட கண்களையும்
வரண்ட தலையையும்
காய்ந்த வயிற்றையும்

காட்டுகிறார்கள்; நம்ம சர்க்கார் தந்தவை! ஆனந்தத் தாண்டவமாடச் சொல்லுகிறீர்களா ஐயா! என்று கேட்கிறார்கள். இந்த நிலையிலும் 'ஓட்டு' எமக்குத் தான் என்று எந்தத் தைரியத்தில் பேசுகிறார்கள் ஆளுங்கட்சியினர்?

பணம் இருக்கிறது பார்த்துக்கொள்ள
லாம் என்ற ஒரே தைரியத்தில்.

போக போக்கியத்திலே மூழ்கி, வலி விழந்து கிடந்த ஐநூறு சிற்றரசர்களையும், செல்வச் செருக்கு மிக்கோரையும் பதவிக்காகவும் பட்டத்துக்காகவும் பல்லிளித்துக் கிடப்போரையும், ஆலவட்டங்களையும் ஆமாம்சாமிகளையும் பக்கத்துணையாக வைத்துக் கொண்டு இருநூறு ஆண்டுகள் வெள்ளை ஏகாபத்தியம் ஆட்சி நடத்த முடிந்ததல்லவா? இவர்கள் அதே 'பாணி'யில் தமது ஆட்சியை நடத்திச் செல்ல முடியும் என்று நம்புகிறார்கள்.

அவர்களால் முடிகிறதா இல்லையா என்பதல்ல பிரச்சினை, நாடு இன்னமும் அவர்களின் ஆட்சியைத் தாங்கிக்கொள்ள முடியுமா என்பது தான் பிரச்சினை.

தம்பி! காங்கிரசாட்சி துவக்கப்பட்டபோது, மக்களின் வாழ்விலே வளம் உண்டாக்க என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டபோது, ஒரு வசீகரமான புன்னகையுடன் காங்கிரஸ் தலைவர்கள் கூறினார்கள்,

ஐந்தாண்டுத் திட்டங்கள் போடப் போகிறோம் என்று.

மூன்று முடிந்து, நாலாவது நடமாட விடப்பட்டிருக்கக் காண்கிறோம். திட்டங்களால் கிடைத்த பலன் என்ன? எங்கு சென்றுள்ளது? என்று கேட்கிறார்கள்;

நானும் அதைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன். ஐந்தாண்டுத் திட்டங்களால் விளைந்த பலன், எங்கு போயிற்று என்றுதான் தெரியவில்லை; ஏழைக்கு அந்தப்பலன் வந்து சேரவில்லை என்று காமராஜர் கூறுகிறார்.

திட்டத்தை நிறைவேற்றினோம். ஆகவே எமக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட்பதற்கான நியாயம் எங்கே இருக்கிறது. பலன், போன இடம் தெரியவில்லை என்று பெருந்தலைவரே பேசுகிறாரே!

[அடுத்த இதழில் முடிவுறும்]

மான் வாழ மயில் பறந்தது!

அந்த நாள்,

முழுமதி நாள். மூடிவைத்த அழகையெல்லாம் அன்று முழுமையாக காட்டிக் கொண்டிருந்தான் சந்திரன். இழை இழையாக பின்னிவந்த இருளை அலை அலையாக ஒளியூட்டி அகற்றிக் கொண்டிருந்தான் அவன். இலை இலையாய் ஆடிவந்த தென்றல் உள்ளத்தில் பதிந்து கிடந்த எண்ணங்களைக் கிளறி விட்டது. அதில் அடுக்கிவந்த காட்சிகளை மனத்திரையில் எண்ணி உணர்ச்சிவசத்தில் மூழ்கி இருந்தான் மோகன். நீலவானத்தில் நீந்திவந்த சந்திரன் கடல் அலைகளால் உறக்கம்கொள்ள நினைத்தானோ என்னவோ கண்களை மூடித் திறப்பதைப் போன்ற பாவனை, தாரைகள் கொஞ்ச தவழ்ந்த அவன் மேகத்தில் மறைந்தோடிக் கொண்டிருந்தான்.

வாழ்க்கையிலும் இப்படித்தான் சில செயல்கள் நிகழ்ந்து விடுகின்றது. இன்பத்திலே ஊறிக்கிடக்கத்தான் நெஞ்சம் முயல்கின்றது. ஆனால் மேகத்தைப் போல் சில துயரங்கள் தொடர்ச்சியான இன்ப வாழ்வைத் துண்டித்து விடுகின்றது. இப்படித்தான் மோகனின் வாழ்க்கையிலும் நடந்த அந்த ஒரு நிகழ்ச்சி இன்று நினைக்கும்போது அவன் இதயத்தை ஏங்கவைத்தது.

சிவகாமி ஒரு நல்ல பெண்!

பெயரிலேயே விளங்கிவிட்டிருக்கும் அவளுடைய நடை, உடை, செயல்களைப் பற்றி.

பள்ளி இறுதியாண்டு படித்துவந்த அந்தப் பாவையைக் காண எத்தனை தேனீக்கள், வட்டமிட்டு வந்தன ஒரு கூட்டம், வாய் இளித்து நின்றது மறு கூட்டம். அவளுக்காக எதையும் விடத் தயார் என்பதைப்போல் ஒரு கூட்டம் மீசையும் தாடியும் பிறட்டைத் தலையும் கொண்டு நிற்பதைப் பார்த்தால் சபதம் எடுத்து விட்டனரோ என்றுதான் எண்ணத் தோன்றும்.

இப்படி எத்தனையோ கூட்டங்கள் அந்த சித்திரப் பாவையைக் காண, ஆனால் அந்த அழகுப் பதுமையோ மோகனை விரும்பினாள். கல்லூரியில் கடைசி ஆண்டை எட்டிப் பிடித்த அவன் விடுமுறை நாளில்தான் அவளைக் கண்டான் இதயத்தையும் பறிகொடுத்தான்.

ஒரு நாள்,

அன்று சித்திரை மாதத் திருநாள்!

சித்திரைப் பௌர்ணமியில் அந்த ஊரே உறங்கிக் கிடந்தது.

அழகழகான ஜோடிகள் அன்று ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி நிற்கும் நாள்!

அந்த ஊர் சிறிய கிராமமாக இருந்தாலும் ஊருக்கு வெளியில் ஆற்றங்கரை ஓரத்தில் விரிந்து கிடந்த அந்த ஆலமரத் தோப்பு அந்த ஊருக்கு வந்துச் செல்பவரின் கண்களைக் கவர்வதில் வியப்பென்ன!

அத்தகைய கிராமத்து இளஞ்ஜோடிகள்தான் அந்த பௌர்ணமி ஒளியிலே உல்லாசமாகக்கழித்துக் கொண்டிருந்தனர்.

ஆற்று மணலில் அமர்ந்து விதவிதமான தின்பண்டங்களைத் தின்றுகொண்டிருந்தனர் சிலர்.

சிலர் ஆலமரத் தோப்பினுள் நிலவோடு சேர்ந்து வீசும் தென்றலின் சுகத்தைக் காண தன் தலைவியுடன் கைகோர்த்து அமர்ந்து கனிமொழி சிந்திகளிப்புற்றிருந்தனர்.

இலைகளின் இடையில் நுழைந்தோடி வந்த சந்திரன் இறைத்து வைத்த வெள்ளிக் காசுகளைப் போல் தரையைஅலங்கரித்தான். அதைப் பால்மணம் மாறாக் குழந்தைகள் தாவிப் பிடித்து துள்ளித் தவழ்ந்து கொண்டிருந்தன.

சிவகாமியின் வரவிற்காக தனிமையில் காத்திருந்த மோகன் அக்குழந்தைகளின் விளையாடலைக் கண்டு மெய்மறந்திருந்தான்.

சிவந்த மேனியில் தவழும் இளமையை இடையிட்ட சேலையால் மறைத்து அசைந்து வந்தாள் சிவகாமி! துள்ளும் கூந்தல் காற்றில் நெளிய இடையே சிவந்த ரோஜா சிரித்து நின்றது. அன்னத்தின் நடை என்பார்களே அதை அவன் பார்த்ததில்லை. அன்னமும் இப்படித்தான் நடந்திருக்குமோ? இவள் மட்டும் அதை எப்படி பார்த்திருப்பாள்? இடையின் அசைவில் எத்தனை நெளிவுகள்!

இனிய கீதங்கள் தவழ்ந்தோடிக் கொண்டிருந்த அந்த இன்ப நேரத்தில் அவள் அவனை அடைந்தாள். முதலில் பேசிய இளநகையைக் கண்டு மயங்கினான்! இக்காலம் இனித்திருந்ததினால் இனிவரும் காலத்தைப் பற்றி மறந்தனர். அந்த இரவெல்லாம் அவள் அழகைப் பருகினான். வாழ்க்கையில் எத்தனையோ நிகழ்ச்சிகள். அவற்றில் சில மறக்க முடியாதவை. ஆமாம்; அந்த இரவு அவனால் மறக்க முடியாதது தான்.

அந்த மகிழ்ச்சியான நேரத்தில் விளையாடிக் கொண்டிருந்த ஒரு இளஞ்சிட்டு அங்கே ஓடிவந்து நின்றாள்!

"அக்கா நீ இங்கேதான் இருக்கிறாயா? யார் இவர்?" என்று தேன்மொழியாகப் பேசினாள்.

"இவர்தான் உங்க அங்கில்" என்று கூறி சிவகாமி சிரித்தாள்.

"யார் இந்த இளங்குயில்"

"என் தங்கை. பெயர் மஞ்சு" என்றாள் சிவகாமி

கு. சந்தானம்

சிறிது நேரத்தில் சிவகாமி விடைபெற்றுக் கொண்டு வீட்டிற்கு கிளம்பினாள்.

'அங்கில்! டாடா!' என்று முன்பின் பார்க்காத மோகனைப் பார்த்து கூறிவிட்டு அந்த மஞ்சுக்குட்டி அக்காவின் கையைப் பிடித்துக்கொண்டு பறந்தாள்.

மயிலுடன் மான் குட்டி துள்ளிக்கொண்டு சென்றது இல்லம்.

மறுநாள் நீங்காத நினைவுகளை சுமந்துக் கொண்டு ஊருக்கு கிளம்பினான் மோகன். விடுமுறை முடிந்து கல்லூரி திறந்துவிட்டனர்.

நாட்களோ மெல்ல நகர்ந்துகொண்டிருந்தது. ஒருநாள் அவளிடம் இருந்து ஒரு செய்தி ஓடிவந்தது.

"திருமணத்திற்கு பெரியவர்கள் ஏற்பாடு செய்து கொண்டு இருப்பதனால் தாங்கள் உடனே வந்தால் நம் காதலைப் பற்றி அவர்களிடம் கூறி அனுமதி கேட்கலாம் விருப்பம் தர மறுத்தால் நாம் சட்டப் படி மணம் செய்துகொள்ளலாம்" என எழுதி இருந்தாள்.

கடிதத்தை மடித்து வைத்தான். அன்றே ஊருக்கு கிளம்ப ஏற்பாடுகள் செய்தான். ஆனால் இது என்ன சோதனை!

அவனுக்கு இராணுவத்திலிருந்து அழைப்பு வந்தது! தாய்நாட்டைக்காக்க உடனே போரில் இறங்கும்படி அறைகூவல் விடப்பட்டிருந்தது.

கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த மோகன் துப்பாக்கிச் சுடும் பயிற்சியில் நல்ல தேர்ச்சிப் பெற்று முதன்மையாக விளங்கியவன். அதனால்தானே என்னவோ சிவகாமி அவன் கண்பார்வையில் மயங்கி வீழ்ந்தாள் போலும்.

இராணுவத்திலிருந்து வந்திருந்த அழைப்பைக் கண்டபோது அவன் உள்ளத்தில் மின்னிக்கொண்டி ருந்த ஒரு எண்ணம் எழுந்தோடி வந்தது.

"என் மடியில் சுரந்த நீரைக் குடித்து வளர்ந்த வீரர்களே! அன்னியன் கைப்படாத இந்த நீரின் கற்புக்குத் தாழ்வு வந்தால் அந்த நீரே உங்கள் குருதி யாகப் பொழியட்டும் இந்நிலத்தைக் காக்க, என்று தாமிரவருணி ஆறு வீரர்களைப் பார்த்து வீர வார்த்தை முழங்குவதாக மனோன்மணிய நாடகத்திலே ஆசிரியர் குறிப்பிட்டிருந்தது, அவன் நினைவிற்கு வந்தது. ஆமாம், எவ்வளவு பெரிய வீர உரை! அவன் உடலை சிலிர்க்க வைத்தது. அவன் உள்ளத்தையும் பறித்தது! அவன் இதயத்தை சுற்றி வட்டமிட்ட அந்த வீரஉரை அவனது நரம்பு களிலெல்லாம் பாய்ந்து துடித்துக் கொண்டிருந்தது. "நாமும் ஒருநாள் ஒரு வினாடியாவது நம் தாய் நாட்டைக் காக்கும் பொறுப்பில் நின்று உயிர் துறக்க வேண்டும்" என்ற எண்ணம்தான் அவன் நெஞ்சத் தில் அதற்கு சமயம் கிடைத்து விட்டது. பால்மணம் மாறாத பாலகனையே போருக்கனுப்பிய நாடல்லவா இது? அவனுக் கிருக்காத அந்த உணர்ச்சிகள்!

"அத்தகைய திருநாட்டிலா நாம் கோழையாக இருப்பது, அதுவும் ஒரு பூவையை நினைத்து ஏங்கிக் கொண்டிருந்தால் இனி எத்தனையோ ஆயிரம் பூவையரை நசுக்கியவனாவேன். நிச்சயம் இந்த நேரத் தில் சிவகாமி இங்கிருந்தால் என்னைபோருக்குத்தான் அனுப்புவாள்...உயிரைக் காத்த பின் தானே உறவைப்பற்றி நினைக்கவேண்டும்." அவன் எண்ணத் திற்கு ஒரு முடிவு கண்டான்.

முடிவில் அவன் தாய்நாட்டிற்கே வாழ்க்கையை ஒதுக்கினான். போருக்கு சென்று விட்டான். எத்தனையோ இதயங்களை கூறுபோட்டான், அவற் றால் என்ன என்ன நினைவுகள் குவிந்து கிடந்த னவோ! எல்லாம் அங்கே மடிந்தன.

ஆனால் அவன் இதயத்தில் மட்டும் ஒரு நினைவு. அதையாரும் கூறுபோடவில்லை. போடவும் முடி யாது. அதைத்தான் என்றோ சிவகாமி பறித்துக் கொண்டாளே.

போர் ஓசை ஓய்ந்து வெற்றியுடன் திரும்பினான் மோகன். என்னதான் வெற்றிபெற்றாலும் வாழ்க்கை யில் அவனுக்கு தோல்விதானே! ஆமாம்; சிவகாமி இன்று எவனுக்கோ மனைவியாகியிருப்பாள்...!

இப்படி எதை எதையோ எண்ணி ஏங்கிக் கொண்டிருந்த அவனுக்கு இன்னொரு செய்தி எட்டியது.

சிவகாமிக்கு திருமணம் முடிந்து பெண் வீட்டிற்கு செல்லும் வழியில் ஏற்பட்ட விபத்தில் அவள் கணவன் மரணமடைந்ததாகவும், பலத்த காயங்களுடன் உயிர்தப்பிய சிவகாமி இன்று விதவை யாக வாழ்வதையும் அறிந்து துடித்தான்.

"நான் என்ன செய்வேன்! நான்தான் கொடுத்து வைக்காதவன். அவளாவது நன்றாக வாழட்டும் என்றிருந்தாள் அவளுக்குமா இந்தகதி! அன்று எத்தனையோ கூட்டங்கள் சுற்றி வட்டமிட்டு வந்த இந்த அழகு தேவியின் வாழ்க்கையில் இப்படி ஒரு மர்மமா!" அன்று இவள் அழகை வர்ணித்த வாய்க ளெல்லாம் இன்று இவளை ஏசுகிறதே! பழிக்கின் றதே! கணவனை சாகடித்த காட்டேரி என்றெல்லாம் தூற்றுகின்றதே! கடவுளே இதுஎன்ன விளையாட்டு!" என்று அவன் உள்ளத்திலிருந்து வார்த்தைகள் எரிமலையாக வெடித்து சிதறி வந்தன.

காலச் சக்கரத்தில் சுழன்றுகொண்டிருந்த நாட்கள் அன்று முழுமதி நாளாக மாறி வந்தது.

ஆமாம். அதே சித்திரைத் திருநாளேதான் ஓடிவந்தது. அன்று மோகனும் சிவகாமியும் தங்கள் உள்ளங்களைப் பறிமாறிக்கொண்ட அந்த ஒரு நாளும் முழுமதி நாள்தானே!

ஊருக்கு சென்று சிவகாமியை சந்தித்து அவளுக்கு ஆறுதல் கூறவேண்டுமென ஓடினான் தன் கிராமத்திற்கு.

"காதலராக இருந்தபோது, ஆனந்தவெள்ளத் தில் மூழ்கி இருந்தபோது, எங்களுக்கு அந்த ஆல மரத்து நிழல் இனிமையாக இருந்தது அன்று. ஆனால் இன்றோ எங்கள் இருவர் வாழ்க்கையும் வண்டிச் சக்கரங்களின் இருபாதைப்போல் மாறி விட்டன. இன்னிலையில் பழைய நினைவுகளை நினைக் கும் போது அந்த ஆலமரம் என் உயிர்குடிக்க காத்து நிற்கும் பூதமாக சிரித்துக்கொண்டு நிற்கின்றதே! நிலவு ஒளியோ நெருப்பாக என்னைச் சுட்டுக் கொண்டிருக்கின்றதே...!" என்று கடந்த காலத் தோடு இக்காலத்தை மோதவிட்டுத் துடித்துக் கொண்டிருந் தான் மோகன்.

எத்தனையோ இளங்குயில்கள் அங்கே அமர்ந்து ஆனந்த மொழியில் மயங்கிக் கிடந்தனர். பாவம் அவர்களுக்கு எங்கே தெரியப் போகின்றது இனி தங்களுக்கு என்ன என்ன நேரவிருக்கின்றது என்ப தைப்பற்றி! மோகனும் இப்படித்தான் இருந்தான்

அன்று, ஆனால் இன்றல்லவா தெரிகின்றது விதியின் விளையாட்டைப்பற்றி!

சிவகாமியை அங்கே காணவில்லை! வாடிய முகத்துடன் திரும்பினான். அங்கே அவன் உணர்ச்சிகளையெல்லாம் அவிழ்த்துவிட்டு அழவேண்டும் போலிருந்தது. அவன் பின்னால் நின்றிருந்தவள் சிவகாமியின் தங்கை மஞ்சுதான். அன்று அவனிடம் இதே இடத்தில் குறும்பாகப்பேசிச் சிரித்து கரும்பாக இனித்து நின்ற அதே மஞ்சுதான். நல்ல வளர்ச்சி அடைந்திருந்தாள்.

மஞ்சுவும் அவனைப் பார்த்ததும் கண்களைக் கசக்கிக் கொண்டாள். அக்காவிற்கு ஏற்பட்ட நிலையைக்கூறி கண்ணீர் விட்டாள்.

மோகனுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. "ஏன் நாம் சிவகாமியை மறுமணம் செய்துக்கொள்ளக் கூடாது? காதலுக்கும் வெற்றி கிடைக்கும். அவள் கண்ணீருக்கும் முடிவு கிடைக்கும்!" என நினைத்து ஒரு முடிவிற்கு வந்தான். மஞ்சுவை அனுப்பி சிவகாமியை இந்த தோப்பிற்கு வரும்படிச் சொல்லி அனுப்பினான்.

அவளும் வந்தாள். ஆமாம்; அன்று காதலியாக வந்தாள். இன்றோ விதவையாக வந்து நின்றாள். என்னவென்று சொல்வது! அன்று நிலவு ஒளியில் மெருகேற்றிக்கொண்ட அந்த அழகிய உடலா இது...? இவள் சிவகாமியா...? உணர்ச்சிகளில் வெடித்துவரும் துயரத்தையும் அடக்க முடியவில்லை...! எப்படி முடியும்...? உல்லாச வீதியில் உலவி வந்த உள்ளங்களல்லவா...?

"ஒருசமயம் என் ரோஜாமலர்த் தோட்டத்திற்கு அவளை அழைத்துச் சென்றிருந்தேன். அவளைக் கண்டு ஆரவாரம் செய்வதைப்போல் காற்றில் அந்த ரோஜாக்களெல்லாம் அசைந்து கொண்டிருந்தன. அதைக் கண்டதும் ஓடி ஓடி அந்த மலர்களைக் கட்டி தன் கன்னத்தோடு அணைத்து மகிழ்ந்தாள் சிவகாமி. அவள் கன்னங்கள் பட்டதால் அந்த ரோஜாக்களெல்லாம் எழில்பெற்றதோ, அல்லது அந்த ரோஜாக்கள்தான் அவள் கன்னத்திற்கு அழகூட்டியதோ என்று அவள் கன்னங்களைக்கண்டு மயங்கினேன். ஆனால்...இன்றோ...எங்கே அந்த ரோஜாவின் எழில்பெற்ற கன்னங்கள்...? கார்கால முல்லையாக இருந்தவள் இன்று கருகிக்கிடக்கின்றாளே! இதையெல்லாம் காணவா இங்கு ஓடிவந்தேன்" என்று மோகனின் உள்ளமெல்லாம் வேதனைப் பட்டது.

சிவகாமி அவனைக்கண்டு பொறுமையாக இருந்தாள். முன்பு இருந்த துடிப்பும், மிடுக்கும் இன்று எங்கே போய் விட்டன? இதுதானா பெண்மை யென்பது? மற்றவனுக்கு தலைசாய்த்த பின்பு அவைகளையெல்லாம் குழி தோண்டிப் புதைத்து விட்டாளா? வெடித்து எழும் துயரக் கொழுந்தை உள்ளத்தில் புதைத்து வைக்கலாம். ஆனால் முகம்தான் உள்ளத்தைப் படம்பிடித்துக் காட்டும் பளிங்காயிற்றே! ஆமாம்; அவள் முகத்தில் தோன்றிய மாறுதல் அவனை அணுஅணுவாக சித்திரவதை செய்து கொண்டிருந்தது.

போர்களத்தில் அவனுக்கு நேர்ந்த இன்னல்களையெல்லாம் எடுத்துக்கூறினான்.

அவளும் தனக்கு நேர்ந்த கொலைக்களத்தைப் பற்றி எடுத்துக் கூறினாள்.

கருமை விழிகள் கண்ணீரில் கரைந்து கொண்டிருந்தன. மஞ்சுவும் அவளுடன் வந்திருந்தாள். அந்த இளங்கொடியும் அவர்களுடன் சேர்ந்து வாடியது.

முடிவில் மோகன் எண்ணத்தை எடுத்துக் கூறினான்.

மறுமணத்திற்கு சிவகாமி சம்மதிக்கவே இல்லை. எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவள் கேட்கவில்லை. அவன் விருப்பத்தைக்கேட்டு அவள் கதறி அழுதாளே தவிர சம்மதிக்கவே இல்லை.

"அவள் மட்டும் விதவையாகவே இருக்கும் போது நானும் ஏன் மணம் புரிந்து கொள்ளாமலே இருக்கக் கூடாது. இந்த இதயத்தைத்தான் என்றோ அவளிடம் கொடுத்து விட்டேனே! இனியென்ன வேறொரு இதயமா இருக்கின்றது மற்றவளுக்கு கொடுக்க? துயரத்திற்கும் ஒரு எல்லையுண்டு ஆனால் கடவுளே என் வாழ்க்கையில் மட்டும் ஏன் அதை எல்லையில்லாமல் கொடுத்துக்கொண்டிருக்கின்றாய்!" என வேதனையால் வெந்தப் புழுவாக துடித்தான் மோகன்.

"உங்களை மணந்து கொண்டால்தானா நான் உங்கள் மனைவியாகப் போகின்றேன்? என்றோ அந்த பாக்கியத்தை அடைந்துவிட்டேன்! என்று நீங்கள் என்னை சந்தித்தீர்களோ அன்றே நம் எண்ணங்களை பரிமாறிக்கொண்டோம். அன்று முதல் நாம் கணவன் மனைவிதானே! நீங்கள் என்னை உள்ளத்தால் தொட்டுப் பேசவில்லையா! உன்னையே மணந்து கொள்கின்றேன் என்றெல்லாம் எனக்கு உறுதிமொழிகள் தந்தீர்களே...அன்றே நாம் கணவன் மனைவியாகிவிட்டோம் உள்ளத்தால்! அன்று நீங்கள் போருக்கு செல்லும்போதுகூட உங்கள் உள்ளத்திலிருந்தேனே! நெற்றியில் திலகமிட்டுப் போருக்கு அனுப்பினால்தானா மனைவி என்ற தகுதி கிடைக்கும்? ஏன்; அந்த வீரமே உரையும் உங்கள் உள்ளத்திலல்லவா நனைந்தேன். நீங்களும் வெற்றி பெற்றீர்கள்...இதையெல்லாம் எண்ணிப் பாருங்கள், நான் என்றோ உங்கள் மனைவியாகி விட்டேனா இல்லையா என்பதை!" என்று எதை எதையோ எடுத்துக்கூறி மோகனை வார்த்தைகளால் வாட்டி நின்றாள் சிவகாமி.

அவள் சொற்களைக் கேட்டு மோகன் ஊமையாக நின்றான். துயரத்தில் எல்லோரும் ஊமைகள்தானே!

முடிவில் தன் தங்கைக்கே வாழ்வு கொடுக்கும்படி வேண்டினாள் சிவகாமி.

சரியென்று சம்மதித்தான் மோகன். இல்லை... இல்லை...அவனை சம்மதிக்க வைத்தாள்.

அவளே அவர்கள் திருமணத்தை முன்னின்று முடித்து வைத்தாள்.

அவளிடம் பறிகொடுத்த அவன் இதயத்தை அவள் தன் தங்கைக்கு அதை சீதனமாக கொடுத்து காப்பாற்றுமாறு கூறி அனுப்பினாள்.

மஞ்சுவும் அவன் வாழ்க்கையை மெதுவாக ஓட விட்டாள்! தோல்விகளால் துவண்ட அவன் நெஞ்சிற்கு மஞ்சுவின் வார்த்தைகள் சிறிது நிம்மதி தந்தன.

ஒருநாள் மஞ்சுவிற்கு ஒரு கடிதம் வந்தது. கணவன்தானே படித்தால் என்ன என்று பிரித்து படித்தான் மோகன். அது சிவகாமி எழுதி இருந்தாள்.

வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்-நெசவோ நெஞ்சையள்ளும்

★ குர்தாக்கள்
★ பெல் பாட்டம்கள்
★ லுங்கிகள்
★ சேலைகள்
★ உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற வர்ணஜால ஆடைகள் . . .
கோ-ஆப்டெக்ஸ் சகாயமான விலை! ஆதாயமான உழைப்பு!

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.
(பாலசுந்தரம் பில்டிங்ஸ்)
எழும்பூர் :: சென்னை-8.

அன்புள்ள தங்கைக்கு சிவகாமி வரையும் மலர் நலம் உன் சுகமும் உன் கணவர் நலத்தையும் அறிய ஆவல்.

மஞ்சு! நானும் உன் கணவரும் காதலராக இருந்தது மிகக் குறைந்த காலம்தான். எவ்வளவு இன்பத்தில் மூழ்கி இருந்தோமோ அவ்வளவு துயரதில் மடிந்தோம். கண்ணே! நெருப்பும் ரோஜாவும் சிவப்பாக இருப்பதால் இரண்டையும் ஒன்று என கூறமுடியுமா? ஆமாம்; நான் ஒரு நெருப்பு. ஏனோ இறைவன் என்னை அப்படி படைத்து விட்டான். என் நிழல் பட்டவரெல்லாம் இன்று துயரத்தால் துடிக்கின்றனரே ஏன்...? யாரைக்கேட்பேன்...? வாயில்லாமல் சிலையாகி நிற்கும் அந்த செவிட்டு இறைவனையா...? சே...அவன்தான் கல்லால் செய்யப்பட்டு மனிதனால் உருகொடுத்த ஒரு பொம்மையாயிற்றே...! அவன் எப்படி பேசுவான்...!

மஞ்சு உனக்கு ஒரு உண்மையைக் கூறுகின்றேன். திருமண நாளன்று நடந்த விபத்தில் என் கருப்பையில் ஏதோ கோளாறு என்று டாக்டர்கள் அறுவை சிகிச்சை செய்தனர். ஆனால் அதில் புற்றுநோய் கண்டிருப்பதால் விபத்தில் அது அதிகரித்து விட்டிருந்தது. பின் அறுவை சிகிச்சை மூலம் அதை சரிசெய்தனர். எனக்கு குழந்தை பாக்கியமே இல்லை என கூறிவிட்டனர் டாக்டர்கள்.

மஞ்சு! நானொரு மலடி. உன் கணவரோ ஒரு வீரர். தன் ஒவ்வொரு துளி இரத்தமும் இந்நாட்டிற்கே சொந்தமென நினைக்கும் மாபெரும் வீரர். அப்படிப்பட்ட வீரரை இந்த மலடி மணக்கலாமா? அவருடைய சந்ததியை அறுத்தெரியலாமா! இதனால் தான் உன் கணவரை நான் மணக்க விரும்பவில்லை மற்றவர்களுக்கும் இடம் கொடுக்கக்கூடாது என்று தான் உன்னை அந்த தோட்டத்தில் பூத்துக்குலுங்க வைத்தேன்.

கடிதத்தை படித்த மோகன் சிவகாமியின் தியாக உள்ளத்தை எண்ணி போற்றினான். இந்த உயர்ந்த உள்ளம் படைத்தவளுக்கா இந்தகதி...? என ஏங்கினான்.

நல்லவர்களைத்தான் மேலும்மேலும் சோதிப்பது இறைவன் வேலை. ஏனென்றால் இறந்தபின்பு அவர்களுக்கு சொர்கத்தில் இடம் கிடைக்குமாம்...! என்ன விளையாட்டு இது. வாழ்ந்தபோது கிடைக்காத சொர்கம் மாண்டபின்பு என்ன வேண்டிக்கிடக்கின்றது?

மஞ்சுவும் அக்காவின் கடிதத்தை படித்து விம்மி விம்மி அழுதாள். அவளை அணைத்துக்கொண்டான் மோகன்.

அக்காவின் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தாள் மஞ்சு!

கவிதைப் பூங்கா

இவர்கள்...புரியாதவர்கள்!

குயிலம் தமிழ்நம்பி

கடவுளின் பெயரால் மோசம்—இதை
மடமையில் மறந்தவர் நாசம்—தன்
கடமையைத் துறந்தார் சுயநலங் கொண்டார்
நடத்தையி லேதுநற் பாசம்!—உயர்—நேசம்!

தொழுகையும் ஒருவகை இலஞ்சம்—இது
பழுதென உணர்ந்தவர் கொஞ்சம்—பிறர்
அழுகையில் பயனுறும் ஆத்திகன் நித்தமும்
தொழுதிடில் எதற்கவன் நெஞ்சம்-யாவும்-வஞ்சம்!

மனிதரில் ஆயிரம் சாதி—எனும்
மனிதரின் மொழிகள்அ நீதி—வீண்
மனிதரின் பேச்சிதை ஏற்றிடா தாய்ந்துபின்
அணிவகுத் தெதிர்த்திடல் நீதி!—நற்—சேதி!

நலஞ்செய நினைத்திடல் ஞானம்—பிறர்
நலந்தனை அழித்திடல் ஈனம்—தான்
நலமதை அழிப்பதுக் கண்டெதிர்த் தால்பிறர்
நிலவுதல் ஏதுயர் மானம்!—விளைவு—நாணம்!

மதித்திடல் பிறரினை மாட்சி!—வலியத்
துதிபட விழைவது தாழ்ச்சி!—தான்
துதிபடல் "உடமையால்" என்றுண ராதார்
மிதிபடல் உண்மை சாட்சி—நாளைக்—காட்சி!

பொருளினை விளைப்பார் பலரே—எனில்
பொருளினைக் குவிப்பார் சிலரே—அந்தப்
பொருளினுக் குழைத்துடல் ஓய்ந்தவர் எவரும்
பொருள்பெற எதிர்த்தார் இலரே-புரியா—துளைரே!

★ ★ ★

அண்ணாவின் சீதனமே!

கவிதாமணி

தஞ்சாவூர்க் கோபுரமே! தமிழ கத்தின்
தலையெழுத்தே! ஒளிவிளக்கே! தமிழை நித்தம்
கொஞ்சிவிளை யாடிவரும் கவியே! கல்லக்
குடிகொண்ட மறவரேறே! வரும்எதிர்ப்பைப்
பஞ்சாக்கி பறக்கவிட்ட சூறைக் காற்றே!
பைந்தமிழர் சாரதியே! இந்தி ஓட்ட
அஞ்சாத சிங்கம் போல் அந்த நாளில்
அனல்கக்கி வந்தவனே! வாழி! வாழி!

கனல்கக்கும் பேச்சாற்றல், பகைவர் கண்டு
கடுகளவும் அஞ்சாத நெஞ்சத் திண்மை
வனப்பான எழுத்தாற்றல், திரைப்ப டத்தில்
வரிக்குவரி சிந்தனையைத் தூண்டும் வண்ணம்
மணக்கின்ற உரையாடல்! மூட வாழ்வை
மண்மூட வைக்கின்ற எழுத்து வேகம்
தனதாக்கிக் கொண்டவனே! தமிழ கத்தின்
சரித்திரத்தை மாற்றியநற் கலைஞா, வாழ்க!

பேரறிஞர் அண்ணாவும் நம்மை விட்டு
பிரிகையிலே தமிழகத்தை நடத்திச் செல்ல
சீராக, சீதனமாய் விட்டுச் சென்ற
திருவாரூர் மாநிதியே! கருணை ஊற்றே!
ஈரோட்டு வெண்தாடி வேந்தர் கண்ட
இளவரசே! தமிழகத்தில் ஒளி விளக்கை
ஏற்றி வைத்த நாயகனே! அண்ணா கண்ட
இலட்சியத்தைச் செயல் படுத்தும் தலைவா
வாழ்க!

★ ★ ★

நிகரில்லா அண்ணன்!

ந. சுப்பிரமணியன் பி. எஸ் சி.

குழலையும் யாழையும் வெல்லும்
குழந்தைகள் மழலையும் தோற்க
தழலான கருத்தினையும் இனிதாய்த்
தருவதிலே நிகரில்லா அண்ணன்.
நிழலாகத் தொடர்கின்ற தம்பிகள்
நிறைவேற்றும் பணிகண்டு மகிழ்ந்து,
விழலாக கிடக்கின்ற மனங்களை
விளைப்பதிலே நிகரில்லா அண்ணன்.

பாட்டாளி மக்களெல்லாம், பசியால்
படுகின்ற வேதனையைப் போக்க
காட்டாட்சி ஒழித்ததனால், வெற்றி
காண்பதிலே நிகரில்லா அண்ணன்.
ஏட்டாலும் எழுத்தாலும், மக்கள்
எண்ணத்தை ஈர்த்துவிட்டு, இன்று
கேட்டாலும் எழுதாது, அமைதி
கொள்வதிலே நிகரில்லா அண்ணன்.

4-ஆம் பக்க தொடர்ச்சி

எது? சரித்திரத்தைச் சாதாரண மாக்கிவிடுவது எது?

கோழையையும் வீரனாக்கி, வீரனையும் கோழையாக்கிக் காட்டுவது எது?

சாதாரணமானவனைக் கவிஞனாக்குவது; கவிஞனைச் சாதாரண மாக்குவது எது?

இப்படியெல்லாம் என்னை அழ வைப்பது எது?

அதுதான் காதலா!

ஓ! என்னை விட்டுவிடுங்கள் நான் சாகப்போகிறேன்!

காலையிலும், மாலையிலும் பேருந்து நிலையம் பக்கம் செல்லுகின்றேன்; காளையர் கன்னியரைக் கண்டு கண்சாடை காட்டிக் கொண்டிருக்கின்றனர். அவர்களைப் பார்த்துப் பாவம்! என்று பரிதாபப்படுகின்றேன்.

ஒரு கல்லூரி நண்பர் என்னைப் பார்த்து, "கவிஞரே! காதல் என்றால் என்ன?" என்று என்னிடம் கிண்டலாகக் கேட்கிறார்.

நான் அவரைப் பார்த்து ஓர் அசட்டுச் சிரிப்பு சிரிக்கிறேன், "காதல் என்பது அறியாமையின் வியாபாரம்; அதனுடன் அது ஓர் இனிமையான துன்பமும்கூட" என்று கூறிவிட்டு வந்து விடுகிறேன்.

காதலால் நேரத்தையும், நேரத்தால் காதலையும் வீணாக்கிக் கொண்டிருக்கும் அவ்விளைஞர்களை நினைத்தபடியே வந்து கொண்டிருக்கும் போது, சிந்தனைக் கீறல்கள் முகத்தில் தோய ஒரு வயோதிகர் எதிரில் வந்தார். எனக்கு அவரிடம் எதையாவது கேட்க வேண்டும்போல் தோன்றியது; உடனே "தாத்தா, காதல்ன்னு சொல்றாங்களே அதைப்பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க?" என்றேன்.

அவர் என்னை ஏற இறங்க பார்த்துவிட்டு, "அதுவா? முதுமையிலே அனுபவிக்கப்போகும் பாவங்களுக்கு இளமையிலே வாங்கும் நுழைவுச் சீட்டுதாம்பா காதல்!" என்றார்.

அவருடைய அனுபவ முத்திரையைப் பெற்றுக்கொண்டு, நான் அங்கிருந்து நீங்கினேன். வரும் வழியில் கன்னியொருத்தியின் பின்னே காளையினங்கள் நடைபயின்று கொண்டிருப்பதைக் கண்டேன். 'பாவம்! காதல் பைத்தியங்கள், காதல் ஒரு நகரம் என்பதை பட்டால் தெரிந்து கொள்வார்கள்!' என்று நினைத்துக் கொண்டே வந்து விட்டேன்.

சமுதாயத்தின் ஒவ்வொரு மனிதனும்தான் காதலால் ஈர்க்கப் படுகின்றான்; பின் ஏன் காதலைக் குற்றமெனக் கூறுகின்றனர்?

இன்றைக்கு அது ஒரு வியாபார மாக மாறியதால்தான்.

ஆண்களால் பெண்களும், பெண்களால் ஆண்களும் ஏமாற்றப்படும் போதும்; பெற்றோர்களால் துண்டிக்கப்படும் பொழுதும்; சமுதாயத்தால் புறக்கணிக்கப்படும் பொழுதுதான் இந்தக் காதலர்க்குக் காதலைப் பற்றி அறிவே வருகின்றது.

காதல் உயிர்களுக்கு ஊட்டமளிக்கிறது; உயர்வளிக்கிறது. ஆனால் இன்றைக்கு அது உயிருக்கு இறுதியல்லவோ பயக்கிறது.

நான் காதலைத் தெய்வீகமாகவே போற்றினேன்.

ஆனால்,

ஏதோ ஒரு சக்தி என்னை உடைந்த மண்பாண்டமாக்கி விட்டது.

என் உள்ளக் குமுறலை எவரிடமாவது சொல்லி அழத்தான் நினைக்கிறேன்; ஆனால் முடியவில்லை.

ஏனோ, என் உள்ளம் தரை மீன் போலத் துடிக்கிறது.

என்னை இப்படித் துடிக்க வைக்கும் சக்திதான் எது?

அதுதான் காதலா!

ஓ! என்னை விட்டுவிடுங்கள் நான் சாகப்போகிறேன்!

வெளிவருகிறது!

'காஞ்சி'

அறிஞர் அண்ணா — பொங்கல் சிறப்பு மலர்

பேரறிஞர் அண்ணாவின் படைப்புக்களுடன்

கழகத் தலைவர் கலைஞர்

கழகப் பொதுச்செயலாளர் நாவலர்

மற்றும்

அமைச்சர் பெருமக்கள்

அருந்தமிழ்ச் சான்றோர்கள்

இளைய தலைமுறையின்

இலட்சிய எழுத்தாளர்கள்

அனைவரின் எழுத்தோவியங்களைத் தாங்கி - எழில்மிகு மூவண்ண முகப்போடு தைத்திங்களில் வெளிவரவிருக்கிறது.

கவிஞர் மணிவேந்தன் அவர்களின் "பயிற்றுப் பாவியம்" சிறப்பு மலரில் இடம் பெறுகிறது.

கவிஞர் தமிழ்ச் சுரபியின் "அண்ணா பிள்ளைத் தமிழ்" தொடரோவியம் சிறப்பு மலரிலிருந்து தொடர்ந்து வெளிவரவிருக்கிறது.

விவரங்கட்கு:

மேலாளர்,

"காஞ்சி" அலுவலகம் : : காஞ்சிபுரம்-3.

தொடர் கதை :

மெல்லிய காதல்

புலவர் தி. நா. அறிவுஒளி

பெண்மையின் ஆணவம் அவளையறியாமல் அவள் ஆழ் உள்ளத்தில் செருக்குப்படமெடுத்தாடிச் சிரித்தது.

வெள்ளிவீதியின் அறிவுமனம் அழுதது.

ஊனுடலோ கிடுகிடென நடுங்கிப் பதைத்தது.

புகழேந்தி குளித்தான்.

உணவு உண்டான்.

உறவினர் நண்பர்கள் நகையாடிப் பேசியிருந்தனர். போலிச் சிரிப்பையும் பொய் நடிப்பையும் மேற்கொண்டு அமைதியாகப் பொறுத்திருந்தான்.

அவனைத் தற்செயலாகப் பார்க்கும் வெள்ளிவீதி, "அப்பப்பா! எவ்வளவு அருமையாக நடிக்கிறார்!" பொய் வாழ்க்கை இது! போலி வாழ்க்கை! ஊரை ஏமாற்ற ஒரு துளிக்கூட அஞ்சவில்லையே! வாழ்க்கையைப் போலி நடிப்பாக நடித்துக்காட்டக் கற்ற இவரா நான் காதலித்த புகழேந்தி? இல்லை. இல்லை. இல்லவே இல்லை! இவர் யாரோ!...யாரோ!...எப்படி இவ்வளவு திறமையாக உண்மையைச் சொல்ல முடிகிறது இவரால்? பொய்யை வாழ்வில் ஏற்று எப்படிப் பொறுத்துக் கொள்ள முடிகிறது இவரால்? உள்ளத்து உணர்ச்சிகளை ஒருசிறிதும் புறத்தே காட்டாமல் பூட்டிப் புதைத்து விட்டுக் கள்ளத் தன்மையாக வெளிப்புனைவு பூண்டு களித்து வாழ்வதுபோல வாழ ஆண்களால் முடியுமா? அடடா! நான் தேடிய உண்மை' இவ்வளவுதானா? அண்ணன் முகிலனை ஒழுங்கற்றவர் என எண்ணி நெஞ்சில் பிறக்கணித்தேனே? என் வாழ்க்கைத் துணைவர் மட்டும்...? ஐயோ! ஐயோ! வியப்பு, வேதனை, ஆற்றாமை, எரிச்சல், பொறுக்கமுடியாத வியப்புகளின் நிலையமானாள் வெள்ளிவீதி.

இவ்வளவு போலி வாழ்வு வாழும்போது புகழேந்தியின் உள்ளம் பட்டபாட்டை

வெள்ளிவீதி அறிய முடியுமா?

அவன் உள்ளச் சான்று அவனுக்கே வாரிவழங்கும் கசையடிகளை அவள் அறிவாளா?

வேகாமல் வெந்து, சாகாமல் செத்து, வாழாமல் வாழ்ந்து, துடிக்காமல் துடித்துச் சிரிக்காமல் சிரித்துப் பாவைக் கூத்தியற்றும் புகழேந்தியின் உள்ளப் போராட்டத்தை யார் உணர முடியும்?

திடுமென உள்ளறையில் மல்லிகையார் "புகழேந்தி! புகழேந்தி!" என வெறிமிக்க குரலில் கூவுவதைக் கேட்டாள்.

நெஞ்சந்திடுக்கிட்டான். சிரிப்பும் விளையாட்டும் அந்த அலறலில் அஞ்சி அடங்கியது. எல்லாரும் பதறி எழுந்தனர்.

விரைந்து அறையை நோக்கி ஓடினான் புகழேந்தி.

"போய் விட்டீங்களா?" என்ற அவலக் கீச்சுக் குரல் மல்லிகையாரின் மெலிந்த வலிய குரலாக எல்லாருடைய செவியையும் தாக்கியது.

"அப்பா!" என அலறிய புகழேந்தி அறையினுள் தந்தையைக் காணவில்லை!

அவரைத் தெய்வமாகக் கண்டான்.

அவன் அன்னையார் ஒப்பிலழகரின் மார்பின்மீது கவிழ்ந்து வீழ்ந்து மயங்கிப் போனார்.

அப்பாவின் காலடிகளைப் பற்றிக்கொண்டு புகழேந்தி புலிவாய்ப்பட்ட புள்ளிமான் போலத் தவித்தழுதான்.

தாங்கமுடியாத துன்பத்தின் தாக்குதலில் வீட்டின் கலகலப்பு குலைந்து அவலத்தின் ஆட்சி முற்றுகையிட்டது.

வெள்ளிவீதியை அதிர்ச்சி உலுக்கியது. எதிர்பாராது நேர்கையில் 'ஆ' என அலறித் தரையில் வீழ்ந்து மயக்க முற்றாள்.

உறவினர் செயலிழந்தனர்; திகைத்தனர்.

அறப்பாவை சுன்றெனக் கதறினர்.

தாயின் அழுகைகண்டு கோதை அழுதாள்.

காற்றும் அமைதியானது

வானம் அமைதியானது

ஊரும் உலகமும் வடிக்கம் போலப் பரபரப்பாக இயங்கின.

உள்ளங்களின் புயல் உலகைத் தாக்குமோ என்னவோ?

எங்கும் துன்பத்தின் கருநிழல் நீண்டு பரவியது.

இருள் சூழ்ந்தது.

48

கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைக்கவும் அறியாதவனாகப் புகழேந்தி எங்கோ அவல உலகில் ஆழ்ந்திருந்தான்.

முகிலன் அருகில் வந்து புகழேந்தியின் தோள் மீது கை வைத்தான்.

"புகழேந்தி, எல்லாம் முடிந்து விட்டதப்பா. ஊருக்குப் போகிறவர்களுக்கு நீ சற்று ஆறுதலாக இருந்து வழிவிட வேண்டாமா? இப்படிச் சிறு

குழந்தை போலக் கண்ணீருங்கம்பலையுமாக இருக்கலாமா?" என ஆறுதலுரை கூறினான்.

புகழேந்தி பேசவில்லை.

தந்தையின் பிரிவு அவனுயிரையே சுட்டுத் தீய்த்துக் கொண்டிருந்தது.

சாவு எத்தகைய இரக்கமற்றதாக அன்புள்ளங்களைப் பிரித்து விடுகிறது!

புகழேந்தியின் அன்னை மல்லிகையார் கண்ணீர் வழிய அறையினுள் கவிழ்ந்து கிடந்தழுது கொண்டிருந்தார்.

உணவோ, உணர்வோ அவருக்கு வேண்டாததாகத் தோன்றியது.

சிலநாள்களுக்குள் மல்லிகையார் எலும்புக் கூடாக இளைத்துவிட்டார், துன்பம் மக்களை எப்படி ஒடுக்கும் என்பதற்கு அஞ்சத்தக்க சான்றாகச் சாட்சியளித்தார்.

அறப்பாவை, சுடர்க்கொழுந்து முதலியோர்தம் தம் ஊர்களுக்குச் சென்று விட்டனர்.

அந்தக் குடும்பத்தை உருவாக்கி நிலைநிறுத்திய உழைப்போவியமான ஒப்பிலழகர் இன்று இல்லை.

தாயை நினைக்கும் போதெல்லாம் தணலில் குளிக்கும் நிலையில் துன்புற்றுத் தவித்தான் புகழேந்தி.

அவரைக் காணக் காண அவன் நெஞ்சிலிருந்து ஊற்றென அவலமும் அழுகையும் பொங்கியது.

தலைகுனிந்தபடி தோட்டத்துக்குச் சென்றான்.

வெள்ளிவீதி தண்ணீர் முகந்து எடுத்து வைத்தாள். முகங்கழுவினான் புகழேந்தி.

ஒப்பிலழகரின் உருவப்படம் பெரிய அளவில் புதிதாக அமைக்கப் பெற்றிருந்தது கூடத்தில்.

அதையே சிறிது நேரம் உற்றுப் பார்த்தான் புகழேந்தி. ஏக்கமும் ஏமாற்றமும் இரக்கமும் காண்போரை உருகச் செய்தது.

வெள்ளிவீதி உள்ளம் கசிந்து கரைந்தாள். அவனுணர்ச்சிகளைத் தானே துய்த்துலிம்பினாள்.

புகழேந்தி மீண்டும் தன்னறைக்குட் சென்றான். மேசைப்பலகைமீது கவிழ்ந்து கொண்டான். கண்ணீர் மழை ஓயாமல் பொழியலாயிற்று.

சிற்றுண்டியை எடுத்து வந்த வெள்ளிவீதி புகழேந்தி பொருமிப் பொருமியழுவதைக் கண்டு திகைத்தாள். தான் நிற்கும் நிலம் கிடுகிடுத்து நடுநடுங்கினால் எப்படியிருக்குமோ; அதுபோலத் துடிதுடித்தாள் வெள்ளிவீதி.

அவனுயிரோடு வெள்ளிவீதியின் உயிர் ஒன்று கலந்து விட்டதோ என்று என்னுமாறு அவள் ஒன்றிய உணர்வுடையவளாயிருந்தாள்.

புகழேந்தியும் வெள்ளிவீதியும் பேசுவதும் குறைவு; நெருங்கிப் பழகவும் வாய்ப்பும் சூழ்நிலையும் அமையவில்லை.

'பேசும் ஊமை நடிகர்' நிலையில் அவர்கள் இருவரும் வாழாமல் வாழ்ந்து வந்தனர்.

எவன் அவளுடைய முழு உரிமையோ, எவன் அவளில் நீக்கமற ஒன்றிக் கலக்க வேண்டுமோ, அவன் அவளுரிமையாய் உடைமையாயில்லை, என வெள்ளிவீதி உணர்ந்த அந்நொடியிலிருந்து வெள்ளிவீதி உலகின் பற்றையே துறந்து விட்டாள்.

கீழ்மையான உடற்பசிக்காகவா இவ்வாழ்வு? ஊனில் தோன்றும் ஒரு துடிப்பு நோய்க்காகவா திருமணம்? உள்ளத்தாலும் கள்ளமற்ற, களங்கமற்ற, காதலனையே வெள்ளிவீதி விரும்பினாள்; வேண்டினாள். அத்தகைய தூயவனுக்கே தன் தூய காதலை உரிமையாக்க விழைந்தாள் வெள்ளிவீதி.

அவள் காதலன் ஒழுக்கத்தின் ஓவியம். ஆனால் அவள் கணவன் புகழேந்தி?...

நம்பிக்கை இடிந்தது. அந்த அதிர்ச்சியை வெள்ளிவீதியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

தமிழ்ப் பெண்மையைத் தானாக அடைந்த வெள்ளிவீதி கணவனானாலும் அவனை மன்னிக்க விரும்பவில்லை.

மனைவியின் உடலோடு உள்ளமும் கற்பு வாய்ந்து தூய்மையாக வாய்க்க வேண்டுமென்று கணவன் எதிர்பார்க்கிறான். அப்படித்தானே கணவனும் உள்ளும்புறமும் தூயவனாகக் கற்பாளனாக வாய்க்க வேண்டுமென மனைவியும் எதிர்பார்ப்பாள்? வெள்ளிவீதியின் நெஞ்சம் தோய்ந்த விழைவு தூய கணவனே.

தன் அண்ணன் தவறு செய்வதையே விரும்பாதவளல்லவா வெள்ளிவீதி?

மங்கையர்க்கரசி முகிலனின் அறைக்குள் இரவில் சென்று வந்ததைக் கண்டபின், அண்ணன் முகிலனைப் பற்றிய உயர்ந்த மதிப்பினையுப் சிறப்பான எண்ணத்தையும் மாற்றிக் கொண்டாள் வெள்ளிவீதி. அவள் கணவனுக்காகக் குறிக்கோளை இழப்பாளா?

இரவெல்லாம் இடர்க்கடல் நீந்திக் கரைகாணாது துடிக்கும் வெள்ளிவீதி பகலெல்லாம் ஓயாதுழைத்து இல்லப் பணிகளில் உழன்று அமைவாள்.

ஓயாத எண்ணங்கள், ஒழியாத மனப் போராட்டங்கள் அவள் 'அறிவை அமைதியற்றதாக ஆக்கின.

அவள் காதல் உள்ளமோ கசிந்துருகும்.

(வளரும்)

நமக்கும் நல்லது!
நாட்டுக்கும் நல்லது!

பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரட்டிப்பாகிட தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தட்டங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

குடும்பநலத் திட்டம்

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம்:—
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
88. திருக்கச்சிநம்பித் தெரு, அண்ணி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.